362

உ

வந்தேமாதர

கல்லிடை

நா. ச. ச

இயற்றி

OF THE
23 OCT 1920

# ஸ்ரீ திலகீயகீதம்.

டாக்டர். T C. சங்கரய்யர் அவர்களால்

பிரசுரம் செய்யப்பட்டது.

**KALLIDAI,**

***N S Sarma's***

# SREE TILAKEEYA GEETHAM.

*PUBLISHED*

**by**

**Dr. T. C. SANKARAIER Avl;**

KALLIDAIKURICHI.

**Printed at**

**EKANANDA PRESS,**

SAMUDRAM.

d. Price 0-1-0

0-,1x
N20
175700

# வந்தேமாதரம்.

இ-ம். ஹம்ஸத்வனி. தா-ம்: ஆதி.

ஸ்ரீ தியாகராஜகிருதி ஸ்ரீரகுகுல-என்றபடி.

பல்லவி.

ஸ்ரீ தீர சக்தி ஸ்வாதந்திரம் ஸித்தி
இதே ஸமயம் ம்தி பாரதி—ஸ்ரீ

அநுபல்லவி.

சீர் தரு வேத வேதாந்த போதி
ஆதார பூதி மாதே பாரதி—ஸ்ரீ

சரணம்.

எங்கும் யாரும் போற்றும் பங்கஜாஸனிஸர்
வாங்க சுந்தரி மங்களாங்கி தேவி
சங்கு சக்ரதாரி சோங்கு முகாரி
கங்கா தரஸ்ரீ திலகார் யோர் மாதே—ஸ்ரீ. (1)

இ-ம். தோடி. தா-ம்; ஆதி.

ஸங்கீத வித்வான் கல்லிடை பிரம்மஸ்ரீ
வேதாந்த பாகவதர் அருளிய,

ஸாதரமுகதுஹ—என்றபடி.

பல்லவி.

பாரத மாதே யருள் புரியவா நீ—பா

அநுபல்லவி.

பாரதின் சீரிது வென் பரவு மதம்
பாராதி வேதாதி மூலப்ரிய தாரணி—பா

சரணம்.

மாதுனது ஸோதனை மறப்பதாகுமா
முறையதாகுமா குறை தீருமா
பாது காரு காரென்று பரிந்திரைஞ்சும்
பாலகங்காதர திலகஸோ தாரியரை—பா (2)

இ—ம். சுந்தசாவேரி. தா—ம்; ஆதி.

அம்பல நாடக மாடிய—என்றபடி

பல்லவி.

யாருக்குத் தான் தெரியும் அவர்மகிமை
ஊருக்குழைத்ததிரு பாலதிலகரை—யா

அநுபல்லவி.

சிருக்கெல்லா முயர் ஜீவன் ஸ்வதந்திரமென்
போருக்கொருப்பட்ட பாரதத் தலைவனர—பா

சரணம்.

பூமேற் பிறந்த பயன் பலர் நலங் கார்க்கிட
ஆமிதென் றுரைத்திடும் ஆரிய குலமணி
நேமி பெரும்ஸ்வா தந்திர காமி
பூமிகா மின்னென புலத்திடு நலத்தினனை—பா

தன்னிலை மையறிந்தார் தன்னலம் மறுத்தார்
அன்னிலை கூட்டிட தன்னிடை நாடினர்
தன்னயத் தோர் செய் துயர் பல பட்டும்
தன்னிடை நழுவாத்த திருதகை யாளனை—பா

உலகெங் கணும்புகழ் சகலக லாவல்லோர்
திலகமெனத் திகழ் தேசியத் தலைவர்
உலகி லொருவன் பிறப்புடன் ஸ்வதந்திரமும்
விலகிடா தொரு பெரு உரிமை யென்றறைந்
[தோனை. (பா) (3)

இ—ப். ஆந்தோளிகா. தா—ப்: ஆதி.

ராக ஸுதா ரஸ—என்றபடி

பல்லவி.

பாலகங் காதர திலகமஹாராஜா—
பாரதியருள்திகழ் (பா)

அநுபல்லவி.

பால வயதுமுதற் பாரதத் தொண்டுபூண்டோய்

சரணம்.

ஸ்வதந்திர ஸமத்துவ ஸகோதரத் திற்காகவே
ஸ்வதன முடல் ஆவி தியாகஞ் செய்ததிருமூர்த்தி பா

இ-ம். கமாஸ். தா-ம். ரூபகம்.

ஸுஜன ஜீவன—என்றபடி

பல்லவி.

லோக கீர்த்திசேர்—தியாக மூர்த்தியே—திலகா—லோக

அநுபல்லவி.

போகபாக்கிய மிழந்து—சோக மீறி யுழன்று
சாகு மாறுறு போதறிந் ததை நீக்கி
வைத்தவா—திலகா—லோக

சரணம்.

பேருபெத்த தாதாபாயின் நேருரை மூன்றும்
தீருகாற்க சூரத்தேதகி சீருரைத்தவா [கம்
ஆரியத்தோர் ஆண்மைகோட—வாய்த்த தந்தப் பிரஸங்
கார்த்தவா இந்திய—காங் கிரஸ்கௌரவஞ்
சேர்த்து வைத்தவா—திலகா லோக (5)

## இ--ம், கமாஸ். ஜாவளி தா--ம். சாப்பு.

மாத்தாட பார தேனே-என்றபடி

பல்லவி.

கங்காதர திலகா எங்கோ நீசென்றாய்
எங்காரும் புகழ் தேச ஸேவை செய்வீர விம்ஹா —க

அநுபல்லவி.

துங்க பத்ரா தீர ரத்ன கிரீபுரீசா
துங்கச் சிவாஜி சீர் பூர்ணபுரீநி வாஸா—கங்

சரணம்.

வேதா வெகுவி தாதா வேதாந்த போதா
நாதா நலஞ்செய் கீதா பாஷ்யம் செய்த விநோதா
மாதா சீர்பெறக் காண மாதவஞ் செய்து மவன்
நேரதீரர்த்தது கண்டோ பூதலம் நீத்தாய் சொல்—க

§ மறப்பாலும் பிறவாலும் மதிப்பிழந்த வெந்தமக்கு
பிறப்புரிமை ஸ்வயாட்சி வேண்டுமென் றன்
குறிப்போ டுழைத்தும் நம் விருப்பம் நிறைவே றாது
இருப்ப தறிந்தும் பரந் தாமன் பாதமேயடைந்தாய்-க

ஆரியஞ் செழித்திடக் காரியம் பலசெய்து
சீரியது வேண்டிச் சிறைமிகு நீகொண்டாய்
கோரியதி லொரு கூறு கிடைத்ததை
நேரிய தாக்கலா மென்றுறுத்திப் போக வில்லாமல் —க

---

§ ஸ்ரீமான் திரு. வி. கல்யாணஸுந்தர முதலியார் அருளியதை ஸந்தர்ப்பத்திற்கேற்ப சேர்த்திருக்கிறது

இ--ம் பலஹம்ஸா. தா--ம். ஆதி.

தண்டமு பெட் டேனுரா என்றபடி

பல்லவி.

உண்மை யடியார்க்கதிபா தர்மஸ்வ ரூபா திலகா --உ

அநுபல்லவி.

தன்முத லதிகார த்தன்மையேதம் நாட்டினர்
முன்பட விரும்பு தென்ற சின்ன கங்காதர திலகா--உ

சரணம்.

இங்கெமையா ளாங்கிலவதிகாரத்தார் ஆள்முறை[மேகள்
தங்களவர்க்காக வன்றி இங்குமேலோர்க்கன் றென்றுரை
செங்கோலா ஜார்ஜநிபா சங்கடந்தீர்த்தரு ளென்ற-
[திலகா—உ

எங்கள்ஜி யார்ஜ்மன்னர் மன்னவாநீர் உங்களவர்க்-
[கானடர்போல்
எங்களைநாங் களையாளும் பாங்களிக்கவேண்டு மென்ற
காங்கிரஸ்த் தலைவா ஸ்ரீ சங்கரார்ச் சிதா-திலகா—உ (7)

இ--ம். ஸ்ரீரஞ்சனி. தா--ம். ஆதி.

புவனித்ரா ஸூடனி-என்றபடி

பல்லவி.

மாதார்ய் வித்யாங்க புராணி - கா த்ா கா வென்னுன்-
ஸூதனீ காவாய்.................மாதார்ய

அநுபல்லவி.

பாதார விந்தமே கதியென் வாதாடுமென் (பக்த
பரிபாலினீ தேவி மா

சரணம்.

பரஞ்சோதி பால அறம்செய்தி யென்னும்
நிரஞ்சா நித்திடும் அருட்ஜோதி யனும்
தரஞ்சொல் லொண்ணு ஆர்ய குலமணி
பெருஞ்சாதி பால(கங்காதர)திலகார்ய ஸாதனை—மா

இ—ம். தன்யாசி. தா—ம். ஆதி.

9. ராகஸ ாரஸ என்றபடி.

பல்லவி.

பாலகங் காதர திலகரை ஸ்மரியாத்த
பிறவி என்னே பிறவி பால

அநுபல்லவி.

காலானுஸாரக் காரியம் கைகொள் சீலா
லாலா லஜபதி போர்புகழ் வீரதோளா—பால

சரணம்.

எங்கும்நம் மிந்தியர் பங்கப்படா துற
தன்னரசு வேண்டி
காங்கிரஸ் தூதனாய் ஆங்கிலம் சென்று
தங்குறை சொற்றவா ஸ்ரீசங்க ரார்ச்சித—பால

இ-ம். ஹரிகாம்போதி, தா-ம்: ஆதி.

10. எந்தரா நீதனு—என்றபடி

பல்லவி.

உத்தமா சக்திதா நித்திய ஸ்வரூப
கர்த்தனே யருள்சீலா ஸ்ரீதிலகா—உத்

அநுபல்லவி.

குற்றவாளிநீ நின்குறை சொல்லென்ன
கொற்றவா நான் மெத்தப் பேதை யென்ற—உத்

சரணம்.

தான்சிறை யடைவதும் தாய்நாட்டு நலத்திற்கென்றே
நாதன்விதியு மிருக்கு மென்ற (உத்)

காலநந்தச்சன் தொண்டன் ஸ்ரீசங்க ரார்ச்சித
பாலகங் காதர திலக (உத்)

இ—ம். முகாரி- தா—ம்; ஆதி.

11. ஸ்ரீ வேதாந்த கிருதி ப்ரோவநாமனு-என்றபடி.

பல்லவி.

அடிமை நீக்கு ஸ்வாதந்திர தேவி
கடமை புரிந்து கடைத்தேறிடுவோம்-அடி

அநுபல்லவி.

திடமளித் திடர் தீர்த்திட வேநீர்
உடன்னின் றுதவி உயர்ஜாதி யென்ன - அடி

சரணம்.

மன்னு புகழ் பெறு மனுமாந் தாதாதி
மன்னரைக் கொண்டமா பாரத தேவி
உன்னை அன்னையாக உன்னி யுடைந்தும்
அன்னியர் கைப்பட்டும் அல்லலும் படவோ - அடி
உரிமையுந் தன்மதி புகழும் நிறைமையும் போய்
நிராதரவாய்
தருமையன் மாள வறுமையன் மீள
ஒருமை துறந்து சிறுமையுங் கொண்டார் - அடி
உண்மையி தறிந்து உள்ளம் பதறி
முன்னது பெற உன்னி முயலும்
தன்மையாய்ச் சங்கரன் போற்றும்பா லதிலகை
வன்மையோரும் தேச நன்மை நாடி வேண்ட - அடி.

12. இ-ம். தோடி. தா-ம். ஆதி.

பல்லவி.

ஆலால முண்ட கண்டன் கோலாகல மஹிமை
யாராலும் செப்பத் தரமா (ஆல)

அநுபல்லவி.

காலாலுலகளந்த மாலின் றிருமருகன்
வேலாலுலகளக்கும்-வேலாயுதப்பன் காலன்-ஆ

சரணம்.

மதனனை யெரித்தவா-மதம்பிடித்தலைந்தவா
மதிமுடி புனைந்தவா-மதுரையிற் களித்தவா
கதம்பவனத்தினிடை-நிதஞ்சுந் தரியுடன்
மதித்துவிளையாடுநற் கதியளித்திடுபவன் (ஆ)

மான்மழு தரித்தவன்-நான்மறைக் குரித்தவன்
கோனுடன் கலந்தவன்-தேன்மொழி திருநேத்திரன்
மென்னாக மணிந்தவன்-மென்கரித்தோல் போர்த்தவ
காணுதி ஸாமப் பிரியன் தானாகி நிறைந்தவன் ஆ [ன்

கங்காதர னானவன்-மங்கைபார் வதிநாதன்
எங்கும் மடியவர்க்-கிரங்கும் முலகநாதன்
சங்காதி பதியவன்-சிங்கார நடனவன்
சங்கரன் றாதிமதித் தங்கீக ரிப்பனவன் (ஆ)

இ-ம். ஜயந்தஸ்ரீ தா-ம் ஆதி.

13\. மருகேலரா-என்றபடி.

பல்லவி.

சங்கரீ பாதமே துணை யாமே -சங்

அநுபல்லவி.

சிங்கமீது பவனிவரும் மாகாளி
கங்கை தாங்கி நிற்கும் சங்கரந் தன்காமி - சங்

சரணம்.

துங்க மாஹிம வான் பங்கிலான பெண்ணே
மங்க ளாங்கி தேவி செங்கைவே லன்மாதே
எங்கு மான ஜோதி தங்கு மோன ஆதி
சங்கரன் றுதிக் கிரங்கும் பரஞ்சோதி = சங்

14. · பஜனை பத்ததி.

கங்காதர திலகம் பஜே—பால
கங்காதர திலகம் பஜே.

பாரத மாதீந்த மா மகனார்—ஸ்ரீ
சாரதை பாட்கொளும் சாஸ்தரக் ஞனார்—கங்

மாரத வீரர் மலிந் திருக்கும்—பெரு
மஹாராஷ் டிரவீர புருஷோத் தமா (கங்)

வேத வேதியர் குலக் கொழுந்தே—ராஜ்ய
நீதி விதாயகத் திற்சிறந்தோய் (கங்)

மன்னிய ஆட்சியில்லா மடையும்—இன்னல்
இவையென் றெடுத்தோதிக் கார்த்த வுத்தமா-தங்
பாங்கிழந்த இந்திய மக்களார்தம்—பெரும்
தாக்கம் கலைத்தவர்க்கு ஊக்கமளித்தோய்—தங்

ஸ்ரீ திலகீய கீதம் முற்றிற்று.

## பிழை திருத்தங்கள்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 5. | 12. | மவன். | மவள். |
| 5. | 13. | நேரதீராத்தது. | நோதீராத்தது |
| 6. | 13. | நீர். | (நீக்கிவிடவும்) |
| 7. | 10. | ராகஸ- என்றபடி; | என்றமெட்டை [நீக்கிவிடவும் |
| 7. | 20. | ஆங்கிலம். | இங்கிலம். |

"விவேகாநந்தா" அச்சுக்கூடம், அம்பாசமுத்திரம்.